# இரட்சிப்பு

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# அது தேவனுடைய புத்தகம்



**Bro. Branham:**

நீங்கள் யாரென்றும், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றும், நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்றும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு உலகில் ஒரே ஒரு புத்தகம் மாத்திரமேயுண்டு. அதுதான் வேதாகமம். அது ஒன்று மாத்திரமே உங்களுக்கு அறிவிக்கிறது. அது தேவனுடைய புத்தகம்.

Message: 64-03-06, சாலொமோனிலும் பெரியவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்

## 207. எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்த பின்பு, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு கொள்ளாத சபை ஏதாவது முடிவில் இரட்சிக்கப்படுமா?

338. இல்லை , ஊ-உ. ஏனெனில் இரத்தம் போய்விட்டது, பாருங்கள். அப்பொழுது பரிந்து பேசுதல் இராது - புறஜாதியாரின் காலம் முடிவடைந்து விட்டது. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழ்ந்த பின்பு யாருமே இரட்சிக்கப்பட முடியாது அல்லது எந்த ஒரு சபையும் இரட்சிப்படைய முடியாது. ஊ-ஹூ சபை. "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." பாருங்கள்? சபை எடுக்கப்பட்ட பின்னர் அப்படியொன்றும் நிகழாது.

★★★★★

*செய்தி:* முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

Bro. Branham:

~~~~~

நாம் எதை விசுவாசிக்கிறோமோ, அதன் பேரில் செயல்பட அஞ்சினால், நாம் விசுவாசிக்கவில்லை என்று அர்த்தமாகிறது.

~~~~~

செய்தி: விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியைகள்

ஒரு நபர் எளிதாக நரகத்துக்கு செல்வதில்லை. அவர் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டு நரகத்தை அடைகிறார்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

WHAT SHALL I DO WITH JESUS CALLED CHRIST?

நவம்பர் 24, 1963 பிரன்ஹாம் கூடாரம் ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

59. கடைசி நாட்களைக் குறித்து தானியேல் கூறின அனைத்தும், எப்படி “தேவனை அறிந்தவர்கள் பிரபலமான காரியங்களைச் செய்வார்கள்” என்றும்; எத்தனையோ

வேதவாக்கியங்கள் நாம் வாழும் இந்நாளுடன் பொருந்துகின்றன.

**இந்த பூமியில் பொல்லாத, வஞ்சகமான காலம் உண்டாகும் என்று வேதத்தில் கூறப்பட்டது. நமது காலத்தில் நிறைவேறி வருகிறது.**

**நீங்கள் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டுதான் நரகத்தை அடைகின்றீர்கள்**

அவர்களுக்கு மேசியாவைக்காண ஒரு தருணம் அளிக்கப்பட்டது. ஆனால் அவர்களோ அவர்களுடைய மேசியாவை புறக்கணித்தனர்.



இன்றைக்கும் அதே காரியம் சம்பவிக்கிறது – அதே காரியம். நமக்குத் தருணம்

அளிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் முதலில் .... **அவருடைய நியாயத்தீர்ப்புக்கு முகாந்தரமில்லாமல் தேவனால் நியாயந்தீர்க்க முடியாது.**



சாலையில் வேகமாக காரோட்டி செல்லும் ஒரு குறிப்பிட்ட மனிதரை நீங்கள் நிறுத்தி, சாலையில் அந்த இடத்தில் ஒரு குழி உள்ளது. அந்த வேகத்தில் நீங்கள் சென்றால் விபத்துக்குள்ளாகி

கொல்லப்படுவீர்கள்" என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.



60. அவர், "அர்த்தமற்றது. நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும்" என்று கூறுவாரானால், அவருடைய இரத்தப் பழி உங்கள் மேல் இருக்காது. ஏனெனில் நீங்கள் அவரை முழுவதுமாக எச்சரித்துவிட்டீர்கள்.



நல்லது, தேவன் தமது வார்த்தையின் மூலம் அதை தான் செய்கிறார். வரப்போகின்ற நியாயத்தீர்ப்புக்கு அவர் ஜனங்களை முழுவதுமாக

எச்சரிக்கிறார். அக்காலத்துக்கென்று வேதத்தில் முன்னுரைக்கப்பட்ட அடையாளங்களையும் அற்புதங்களையும் அவர் காண்பிக்கிறார். அவர் அவைகளைக் காண்பித்த போதிலும், ஜனங்கள் அதை காணாமல் கடந்து சென்று விடுகின்றனர்.

**ஒரு நபர் எளிதாக நரகத்துக்கு செல்வதில்லை. அவர் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டு நரகத்தை அடைகிறார்.**



நீங்கள் முதலில் ஒரு பொய்யை கூறின போது, அது தவறென்று அறிந்திருந்தீர்கள். நீங்கள் முதலில் ஒரு சிகரெட்டை புகைத்த போது, அது தவறென்று அறிந்திருந்தீர்கள். நீங்கள் முதலில் ஒரு பொல்லாப்பை செய்த போது அது தவறென்று அறிந்திருந்தீர்கள். உங்கள் மனச்சாட்சி.... அது தவறென்று

உங்களிடம் கூறினது. இருப்பினும் நீங்கள் தொடர்ந்து சிகப்பு வெளிச்சத்தைக் கடந்து, வேலியில் மோதிக் கொண்டீர்கள். நீங்கள் அசட்டுத் துணிவு கொண்டு, அதை எப்படியும் செய்ய வேண்டுமென்று எண்ணம் கொண்டு, உங்களை ஒரு பெரிய மனிதனாகக் காண்பித்துக் கொண்டீர்கள். பாருங்கள்? ஞாபகம் கொள்ளுங்கள். **நீங்கள் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டுதான் நரகத்தை அடைகின்றீர்கள்.**

# நரகத்துக்குப் போவதென்பது எளிதல்ல. நீங்கள் சத்தியத்தைப் புறக்கணிக்க வேண்டும்.



நீங்கள் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு, சிகப்பு வெளிச்சத்தைக் கடந்து செல்ல வேண்டும்.



61. நீங்கள் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு ...... சாலையில் எச்சரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் நீங்களோ உங்கள் சொந்த வழியில் செல்கிறீர்கள்.... மனிதன் இன்றைக்கு அப்படித்தான் செய்கிறான். அவனுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் தெரியும் என்னும் எண்ணம் உள்ளதால், வரப்போகும் நியாயத் தீர்ப்பைக் குறித்த எச்சரிப்பின் அடையாளங்களுக்கு அவன் செவி கொடுப்பதில்லை... கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர்கள்.

# ~ 14 ~



தேவன் அநீதியுள்ளவரல்ல. ஒரு அஞ்ஞானி தூர தேசத்திலிருக்கையில், நாம் இங்கே அமெரிக்காவில் எட்டு, பத்து மில்லியன் டாலர்கள் மதிப்பில் ஆலயங்களை எழுப்பிக்கொண்டு, அந்த அஞ்ஞானிக்கு தேவ செய்தியை எடுத்துச் செல்லாமலிருந்தால், தேவன் நம்மை அதற்காக பொறுப்பாளியாக்கி, அவர்களையோ தப்புவிக்க வைத்துவிடுவார். நிச்சயமாக! தேவன் அநீதியுள்ளவரல்ல.

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: பத்து கன்னிகைகள்

**THE TEN VIRGINS**

டிசம்பர் 11, 1960 பிரான்ஹாம் கூடாரம்
இந்தியானா, அமெரிக்கா

**198.** அவர் இங்கே தேசங்களின்மேல் நியாயத்தீர்ப்புக்கென வருகிறார். "உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண் டானால் நீதிமன்றத்திற்கு போகத் துணிகிறதென்ன? அற்ப வழக்குகளை தீர்க்க நீங்கள் அபாத்திரரா? பரிசுத்தவான்கள்

உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? என்று பவுல் கூறினான். இங்கே நியாயத்தீர்ப்பானது கிறிஸ்துவினிடமும், அவருடையவர்களிடமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் கூண்டிலேற்றி விசாரிக்கிற வழக்குரைஞர் ஆவர். அவரோ சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். வழக்குரைஞராக மணவாட்டி இருக்கிறாள்.

199. இங்கே இவைகள் வருகின்றன. புத்தகங்கள் திறக்கப் பட்டன, ஜீவபுத்தகம் என்ற

மற்றொரு புத்தகமும் திறக்கப்பட்டது.

**200.** முதல் புத்தகம், புறம்பே தள்ளப்பட்ட பாவியைப் பற்றிய புத்தகமாகும். சரி. அவன் துவக்கத்திலேயே ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டவனாய் இருக்கிறான். அவர்கள்தான் வெள்ளாடுகள். அவனுக்கு ஒரு வாய்ப்பும் இல்லை; அவனது துவக்கமே பாவி யாகத்தான் இருக்கிறது. எனவே அவன் புறம்பே தள்ளப்படுகிறான்.

**201.** செம்மறியாடுகள் நியாயத்தீர்ப்பில் நிற்கின்றன.

அவர்கள் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்; பரிசுத்தவான்கள் அவர்களை நியாயந்தீர்க்கவேண்டும். தேவன் அநீதியுள்ளவரல்ல. ஒரு அஞ்ஞானி தூர தேசத்திலிருக்கையில், நாம் இங்கே அமெரிக்காவில் எட்டு, பத்து மில்லியன் டாலர்கள் மதிப்பில் ஆலயங்களை எழுப்பிக்கொண்டு, அந்த அஞ்ஞானிக்கு தேவ செய்தியை எடுத்துச் செல்லாமலிருந்தால், தேவன் நம்மை அதற்காக பொறுப்பாளியாக்கி, அவர்களையோ தப்புவிக்க

வைத்துவிடுவார். நிச்சயமாக! தேவன் அநீதியுள்ளவரல்ல.

202. இங்குள்ள நீங்கள் இதை இதற்கு முன்பு கண்டிருக்காவிடில், நீங்கள் பொறுப்பாளியல்ல; செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு நாங்கள் பொறுப்புள்ள வர்களாயிருக்கிறோம். நீங்களோ அதற்கு நீங்கள் செவிகொடுப்பீர்களா, அல்லது மாட்டீர்களா என்பதற்கு பொறுப் புள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

203. கோவில்களைக் கட்டி கும்பிடுகிற அஞ்ஞானிகள் எழும்பு வார்கள்; அவர்களுக்கு

**அதைவிட மேலாக ஒன்றும் தெரியாது. தேவனைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. தேவன் அநீதி யுள்ளவரல்ல. அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காவிடில், அவர்களை தேவன் ஆக்கினைக்குள்ளாக்கமாட்டார். அவர்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவார்.**

**204.** எனவே சபையில் ஒவ்வொரு சபைக் காலத்திலும், எபேசு சபைக்காலம் முதற்கொண்டு, இங்கே இந்த சபைக்காலம் வரை யிலும், செய்தியானது, கிறிஸ்துவின்

உண்மையான செய்தியானது, அது ஆதியில் இருந்ததைப்போலவே, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், வல்லமை, உயிர்த்தெழுதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், சுகமளிக்கும் வரங்கள், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம், மற்றும் அவர் போதித்த இன்னபிற காரியங்களோடு பெற்றிருக்கும் மணவாட்டியில் உள்ள ஒவ்வொருவரும், வழக்குரைஞராக நிற்பார்கள்.

205. **இதோ இங்கே ஒருவருடைய வழக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.**

“இன்னின்ன இடத்தில் உனக்கு ஒரு கூட்டம் உண்டாயிருந்தது. நீ அவரிடம் கூறினாயா?” என்று கேட்கப்படுகிறது.

206. இப்பொழுது வழக்குரைஞர் கூறுகிறார். “ஆம், நான் அவருக்குச் சொன்னேன்” என்று. அது புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அதை மறுக்கமுடியாது. நம்முடைய எண்ணங்கள் கூட அங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை நீங்கள் மறுதலிக்க முடியாது. “ஆம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று நான்

அவனுக்குக் கூறினேன்" என்று பதிலளிக்கிறார்.

"ஜெஃபர்சன்வில்லில் உள்ள கூடாரத்தில் தானே"

"ஆம் ஐயா, நான் அதை அறிவேன்" என்று பதில் வருகிறது.

207. "ஆம், இங்கே இப்புத்தகத்தில், அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நீ கூறியவைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. பின்பு, அவர் வேத வாக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து, அது சரிதான் என்பதை கண்டுகொண்டார்.

ஆயினும் அதற்குக் கீழ்ப்படியவில்லை"

208. "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் உங்களை நான் அறியேன்" என்பார்.

209. அங்கேதான் அவர் வெள்ளாடுகளை செம்மறியாடுகளை விட்டு பிரிக்கிறார். செம்மறியாடுகளை தனது வலது பக்கமாகவும், வெள்ளாடுகளை தனது இடது பக்கமாகவும் நிறுத்துகிறார். அங்கே நீங்கள்

அந்த மூன்றுவிதமான மக்களையும் காணலாம்.

210. ஆனால் மணவாட்டியாகிய இந்த வகுப்பினர் ஒருபோதும் அந்த வகுப்பினராக இருக்கமுடியாது. அப்பொழுது மணவாட்டியானவள், அவரோடு ஆலயத்தில் இருக்கிறாள். ஏனையோர், பாடுபட்டு, தங்களுடைய மகிமையை இராஜ்யத்தினுள் கொண்டு வருகிறார்கள். மணவாட்டியோ மணவாளனோடு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறாள். மற்றவர்களுக்கோ,

இவர்களைப்போல் அவர்கள் புறம்பே தள்ளப்படுவதுமில்லை, அவர்கள் பணிவிடை செய்வார்கள். ஏனெனில் செம்மறியாடுகளாகிய அவர்களை அவர் வெள்ளாடுகளினின்றும் வேறு பிரித்தார். ஆனால் அவர்...

211. ஆனால் வெள்ளாட்டுக்கோ அதைப்பற்றிய அறிவு இல்லை; அதைப்பற்றி அது அக்கறை கொள்ளவில்லை. அவன் ஒரு வெள்ளாடாக இருக்கிறான், வெள்ளாடு என்ற நிலையைப் பற்றி திருப்தி கொண்டிருக்கிறான். எனவே ஒரு வெள்ளாடாக அவன்

மரிக்கிறான். அதுவே அவன் முடிவாகும். அவ்வளவுதான்.



“கிருபை
முடிந்துவிட்டதா?”
அப்படி ஒருபோதும்
நினைக்காதீர்கள்.
பாருங்கள்? நீங்கள்
எடுத்துக்
கொள்ளப்படும்
வரைக்கும்
உங்களால் முடிந்த
எல்லாவற்றையும்
செய்து
கொண்டிருங்கள்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



செய்தி: 64-08-30 M **கேள்விகளும் பதில்களும்** COD #22

**348. சகோ. பிரான்ஹாமே, கிருபை முடிந்து விட்டதென்றும் இனிமேல் வேறு யாரும் இரட்சிக்கப்பட முடியாதென்றும் சிலர் கூறுகின்றனர்** *(இது என் கையில்*

*கிடைத்ததைக் குறித்து எனக்கு மகிழ்ச்சி).* **நாங்கள் ஜெப வரிசைகளை கவனித்துக் கொண்டு வருகிறோம், சிலர் இன்னும் கிருபையைப் பெறுகின்றனர் என்பது போல் தோன்றுகிறது.**

*இப்பொழுது, இது முதல் கேள்வி, இரண்டு கேள்விகள் உள்ளன.*

198. "கிருபை முடிந்துவிட்டதா?" அப்படி ஒருபோதும் நினைக்காதீர்கள். பாருங்கள்? நீங்கள் எடுத்துக் கொள்ளப்படும் வரைக்கும் உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்து கொண்டிருங்கள். பாருங்கள்?

199. "ஜெப வரிசைகளில் சிலர் கிருபை பெறுவதை நாங்கள் கவனிக்கிறோம்". நிச்சயமாக! கிருபை – கதவுகள் திறக்கப்பட்டுள்ளன

பாருங்கள்? நான் நினைக்கிறேன் நீங்கள் போகுமிடத்தில் இந்த எண்ணம்... பாருங்கள், இந்த வேத வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் சரியான இடத்தில் பொருத்த எனக்கு நேரமில்லை (பாருங்கள்?). இவை ஒவ்வொன்றையும் சரியான இடத்தில் பொருத்த. அவர்கள்... ஜெப வரிசையில் நீங்கள் கிருபையைப் பெறுகின்றீர்கள், நிச்சயமாக

200. இயேசு இன்று பிற்பகல் வரப் போகிறார் என்று நான் அறிந்தால், இப்பொழுது நான் செய்து கொண்டிருப்பதை அப்பொழுதும் செய்து கொண்டிருப்பேன் (பாருங்கள்?), அதை அப்படியே தொடர்ந்து செய்து கொண்டிருப்பேன். கிருபை எப்பொழுதும் திறந்துள்ளது. பாருங்கள்?

201. இப்பொழுது, நான் நினைக்கிறேன், இந்த எண்ணம் எங்கு உங்களுக்கு கிடைத்ததென்றால், ஏழு சபை காலங்களுடனும், ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு முடிக்கப்பட்டதுடனும் இது சம்பந்தப்பட்டது. பாருங்கள்? ஏழு முத்திரைகள், என்ன நடக்கிறது – என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தினது. ஏழாம் சபை காலம், நாம் ஏழாம் சபை காலத்தின் முடிவில் இருக்கிறாம். நான் முடிவு என்று கூறும்போது, இந்த மணி நேரத்தில், இந்த நிமிடத்தில் என்னும் அர்த்தத்தில் நான் கூறவில்லை. உங்களுக்கு ஞாபகமுள்ளதா, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்திலேயே வேதம் என்ன உரைத்ததென்றால்; பவுல், “காலம் சமீபமாயிருக்கிறது” என்று

கூறினான். அது தேவனுடைய நேரத்தின்படி எவ்வளவு காலம் என்று நீங்கள் உணருகிறீர்களா? அது நேற்று. என் காலத்தின்படி அது இரண்டாயிரம் ஆண்டுகள். பாருங்கள்? காலம் சமீபமாயிருக்கிறது. பாருங்கள்? சமீபமாயிருக்கிறது என்று தேவன் அழைப்பது, நாம் சமீபமாயிருக்கிறது என்று அழைப்பது போன்ற ஒன்றல்ல. பாருங்கள்?

202. எனவே தொடர்ந்து விசுவாசித்துக் கொண்டேயிருங்கள், தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருங்கள், தொடர்ந்து... தேவன் இன்னும் கிருபையை திறந்துதான் வைத்திருக்கிறார். உங்களால் முடிந்தவரை, அதற்குள் வேகமாக பாய்ந்தோடுங்கள்.

நிறுத்துவதற்கு நேரம் வரும்போது, தேவன் அதை நிறுத்துவார். பாருங்கள்?

★★★★★

சகோதரன் ஒருவன்
வழிதவறி செல்ல
நேரிட்டால், அவன்
எத்தகைய தவறு
செய்திருந்தாலும்,
அவனை நீங்கள்
பின்தொடர்ந்து சென்று
சரிசெய்ய முயல்வீர்கள்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



---

## செய்தி: புத்திரசுவிகாரம் - பாகம் - ௨

Jeffersonville, Indiana, USA
60-05-18

---

76. அவர்களை வித்தியாசமானவர்களாகச் செய்வது எது?

நீங்கள் பரிசுத்த ஜாதி (1 பேது. 2:9). நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒரு தேசத்தை விட்டு வேறொரு தேசத்திற்குள் பிரவேசித்தீர்கள்.

நீங்கள் எப்படி அதற்குள் பிரவேசித்தீர்கள். ஏனெனில் அது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம். அது எத்தகைய வாக்குத்தத்தம் "நான் கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" ஒரே ஆவியினாலே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த தேசத்திற்குள் சகோதரர்களே, சகோதரிகளே, அல்லேலூயா!

அங்கே இருதய சுத்தம் இருக்கும். எந்த பொறாமையும், விரோதமும் எதுவும் அங்கு காணப்படுவதில்லை.

**சகோதரன் ஒருவன் வழிதவறி செல்ல நேரிட்டால், அவன் எத்தகைய தவறு செய்திருந்தாலும், அவனை நீங்கள் பின்தொடர்ந்து சென்று சரிசெய்ய முயல்வீர்கள்.**

77. அண்மையில் இவ்வாறு வழிதவறி சென்ற ஒரு சகோதரனின் பின்னால் நான் சென்றேன். அதைக் கண்ட ஒரு வாலிபன்,

“அந்த அயோக்கியன் போகட்டும் அவனை விட்டுவிடுங்கள்” என்றான்.

நான் அவனிடம், “**அந்த சகோதரனின் பின்னால் என் இருதயம் செல்லக் கூடாத ஒரு நிலையை நான் அடைந்திருப்பேனானால், நான் உடனடியாக தேவனுடைய சமூகத்தில் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அதன் அர்த்தம். ஏனெனில் நான் கிருபையிலிருந்து விழுந்துவிட்டேன் என்பதை அது காண்பிக்கிறது. அவனுடைய தேகத்தில் மூச்சுள்ளவரை அவன் பின்னால் சென்று, அவனை எங்காவது மறுபடியும் பிடிப்பேன்**” என்றேன்.

ஆம், ஐயா. நான் அவனைப் பிடித்து, அல்லேலூயா, மறுபடியும் கொண்டு வந்துவிட்டேன்.

ஆம், ஐயா. அவன் மறுபடியும் மந்தைக்குள் வந்து பாதுகாப்பாக இருக்கிறான்.

ஆம், ஐயா. இல்லையென்றால் அவன் நிச்சயம் வழிதவறி சென்றிருப்பான்.

★★★★★

பகல் உணவு
வேளையில்,
கிறிஸ்துவுக்காக
ஒரு ஆத்துமாவைக்
கொள்ள ஒரு
இடத்தை
தேடிப்பிடித்து,
அங்கு நான்
செல்வது
வழக்கம்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: மரியாதைகள்

Jeffersonville, Indiana, USA
61-10-15E

47. சில நாட்களுக்கு முன்பு நியூ ஆல் பனியில், ஒரு பாவியுடன் நான் நின்று பேசிக் கொண்டு, அவனைக் கிறிஸ்துவினிடம் வழி நடத்திக் கொண்டிருந்தபோது, மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் கொட்டகையிலுள்ள முரட்டு கையுடைய, பெரிய

உருவம் படைத்த ஒருவன் அவன் என் நண்பன். அவனுடைய மருமகன் பக்கத்திலுள்ள அந்த கொட்டகையின் உரிமையாளர். அங்கு பகல் உணவு நேரத்தில், நான் ஒரு சான்ட்விச்சை தின்றுகொண்டு, அவனிடம் தேவனைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன். பகல் உணவு வேளையில், கிறிஸ்துவுக்காக ஒரு ஆத்துமாவைக் கொள்ள ஒரு இடத்தை தேடிப்பிடித்து, அங்கு நான் செல்வது வழக்கம். அந்த பாவி, "திரு. பிரன்ஹாமே, என் தாய் அப்படிப்பட்ட மார்க்கத்தை, இருதயத்தை உணர்த்தும் மார்க்கத்தை கடைபிடித்திருந்தார்கள்" என்றான். அவன் கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

நான், "அவர்கள் மரித்து எத்தனை ஆண்டுகளாயின?" என்று கேட்டேன்.

அவன், அநேக ஆண்டுகள். அவர்கள் எனக்காக எப்பொழுதும் ஜெபம் செய்து வந்தார்கள் என்றான்.

நான், “அவர்களுடைய ஜெபத்திற்கு செவி கொடுத்த தேவன், இப்பொழுது பதிலளிக்கிறார்” என்றேன்.

அந்த முரட்டு மனிதன் அங்கு வந்து “ஹல்லோ” என்றான். அவன் குடித்திருந்தான். அவன், “பில்லி கேள். நீ இந்த கொட்டகைக்கு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். ஆனால் உன்னுடைய பழைய உருளும் பரிசுத்தர் மார்க்கத்தை இங்கே கொண்டு வராதே” என்றான்.

நான் திரும்பி அவனைப் பார்த்தேன். “கிறிஸ்து வரவேற்கப்படாத இடத்துக்கு நான் வரமாட்டேன்” என்றேன்.

எனவே அவர் என்னிடம் திரும்பி, “ஆ பையனே, உன் எண்ணத்தை விட்டுவிடு” என்றார்.

அப்பொழுது என் இருதயத்தில் ஒரு சத்தம், “நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய். உன் கழுத்தில் ஏந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே உன்னை அமிழ்த்துவது நலமாயிருக்கும்” என்றது.



அன்று பிற்பகல் அவனுடைய மருமகன், சரக்குகள் முழுவதுமாக ஏற்றியிருந்த இரண்டு டன் ஷெவர்லே லாரியை அவன் மேல் தெரியாமல் ஏற்றி, அவனைத் தரையில் கூழாக்கி விட்டான்.

பாருங்கள், நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். நீங்கள் அதை செய்தே தீர வேண்டும். தேவன் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார்.

★★★★★

ஆனால் இன்றிரவு
ஜெபர்ஸன்வில்லில், இந்த
நகரத்தில் இழந்து போன
உலகத்தைக் குறித்து மிகுந்த
அக்கறைக்கொண்டு, நகரத்தின்
பாவங்களுக்காக ஓர் இரவு
முப்பது நிமிடங்களாவது
ஜெபிக்கும்படி செலவழிக்கக்
கூடியது யார்?

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



**செய்தி:** 58-04-06E

## உயிர்த்தெழுதலின் சாட்சியம்

59. ஃபேனிகிராஸ்பி, “சாந்தமான இரட்சகரே; என்னைக் கடந்து செல்லாதேயும்” என்று கதறியழுவதைக் குறித்து என்னால் எண்ணிப்பார்க்க முடிகிறது.

60. இந்த சீஷர்களோ, “வந்து தங்கியிரும், இருட்டிய நேரத்தில் எங்களோடே தங்கியிரும், ஏனென்றால் பொழுதும் போய்க்கொண்டேயிருக்கிறது” என்றனர்.

அவரோ அப்புறம் போய்க் கொண்டிருக்கிறவர் போலக் காண்பித்தார், ஆனால் அவர்கள் அவரை வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்.

வேறு வார்த்தைகளில் கூறினால், அவர்கள் அவரை கெஞ்சி மன்றாடினர்.

**நாம் அதிகமாகக் கெஞ்சி மன்றாடும் ஜனங்களின் மாதிரியாயிருந்தால் நலமாயிருக்குமே!**

61. **சகோதரியே, சகோதரனே, நகரத்தில் செய்யப்படும் அவருவருப்புகளினிமித்தம் பெரு**

**மூச்சுவிட்டழுகிறவர்களின் நெற்றிகளில் பரிசுத்த ஆவியானவர் அடையாளம் போடுவதாக வேதம் கூறியுள்ளதை நீங்கள் அறிவீர்களா?**

இப்பொழுது, நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நாம் நம்முடைய மார்க்க ரீதியான கருத்துக்களின் பேரில் அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறோம்.

**ஆனால் இன்றிரவு ஜெபர்ஸன்வில்லில், இந்த நகரத்தில் இழந்து போன உலகத்தைக் குறித்து மிகுந்த அக்கறைக்கொண்டு, நகரத்தின் பாவங்களுக்காக ஓர் இரவு முப்பது நிமிடங்களாவது ஜெபிக்கும்படி செலவழிக்கக் கூடியது யார்?**

**ஆனால் வேதவாக்கியத்தின்படி தேவனுடைய தூதனானவர் அருவருப்புகளுக்காகப் பெரு மூச்சுவிட்டழுகிறவர்களுக்கு மாத்திரமே முத்திரையிட வேண்டியதாயிருந்தது.**

62. நாம் அக்கறையே கொண்டிருக்கவில்லை.

நாம் அநுபவிக்க முடிந்த ஒரு நல்ல நேரத்தை அறிந்துகொள்ளவே நாம் விரும்புகிறோம்.

நாம் நம்முடைய சபையில் ஒரு சிறு சங்கத்தை வைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்ள நாம் விரும்புகிறோம். நாம் அடுத்த போதகரைத் தேர்ந்தெடுக்கும் நேரம் வருகிறபோது, நாம் வைத்துள்ள ஒரு வாக்கெடுப்பு வரப்போவதை

அறிந்துகொள்ள விரும்புகிறோம். அடுத்த நபருடைய சபையைக் காட்டிலும் நம்முடையச் சபையானது சற்று மேலானதாகக் காணப்படவே நாம் விரும்புகிறோம். அதுவே இன்றைக்கு இந்த உலகத்தினுடைய எண்ணமுமாயிருக்கிறது.

"தேவனாகிய கர்த்தாவே, சீக்கிரமாய் என்னிடத்திற்கு வாரும், இல்லையென்றால் நான் அழிந்துபோவேன். ஓ, என்னை கடந்து செல்லாதேயும், இரட்சகரே. நீர் சர்வ வல்லமையுள்ளவர், சர்வ வியாபியாயிருக்கிற நீரே வந்து என் இருதயத்தில் வாசஞ்செய்யும், கர்த்தாவே" என்று கெஞ்சி மன்றாடுகிறதில்லை.

ஒரு புருஷனோ அல்லது ஸ்திரீயோ கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தங்களுடையக் கரத்தை உயர்த்துவதும் கூடக் கடினமாகவே இருக்கிறது.

பண்டைய நாகரீக துயருறுவோரினுடைய இருக்கையே எடுக்கப்பட்டாயிற்று.

எந்தப் புலம்பலுமே இப்பொழுது இல்லை. பீடத்தண்டைக் கதறியழுவதேக் கிடையாது.

63. சார்லஸ் G. பின்னி என்ற ஒரு சுவிசேஷ பிரசங்கியார், மன மாற்றமடைந்த வழக்கறிஞர், மெலிந்து போன சிறு உருவங்கொண்ட தோற்றமாய்க் காணப்பட்ட நபர் ஒரு கட்டிடத்தில் ஒலியின் ஓசையை

சோதித்து சரிபார்த்துக் கொண்டிருந்ததை சற்று எண்ணிப்பாருங்கள்.

அப்பொழுது அவர், "மனந்திரும்பு இல்லையேல் அழிந்து போ" என்று கூறிப்பார்த்தார். அப்பொழுது மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு மனிதன் மயங்கி விழுந்தான்.

அவர் நியூ இங்கிலாந்தில் ஒரு கட்டிடத்தின் உப்பரிக்கையில் நின்று, இழக்கப்பட்டவர்களுக்கு நரகத்தைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது அவர், "நீங்கள் மனந்திரும்பவில்லையென்றால், அழிந்துபோவீர்கள்" என்று கூச்சலிட்டபோது, புருஷரும், ஸ்திரீகளும் வீதிகளில் மயக்கமுற்று விழுந்தனர்.

64. ஆனால் இன்றைக்கோ நீங்கள் மனந்திரும்புதலையும், நரக

அக்கினியையும், கந்தகத்தையும் குறித்துப் பிரசங்கித்தால், ஜனங்கள் அதைப் பார்த்து நகைப்பார்கள்.

காரியம் என்ன? நம்முடைய இருதயங்கள் குளிர்ந்து போயிருக்கின்றன. நாம் கவலையற்றவர்களாயிருக்கிறோம். நாம் ஏராளமானவற்றை உடையவர்களாயிருக்கிறோம்.

நமக்கு உலகத்தைக் குறித்து மிகக் குறைவானதும், தேவனைக் குறித்து மிக அதிகமானதுமே தேவையாயிருக்கிறது.

நம்முடைய இருதயங்கள் மிகவும் குளிர்ந்து போயிருக்கிறது. நாம் ஏதோ ஓர் உணர்ச்சிவசப்படுதலில் ஆர்வமாகிவிட்டோம்.

நாமோ, "நம்மால் நடனமாட முடிந்தால்; நம்மால் சத்தமிட முடிந்தால்" என்பதில் ஆர்வமடைந்துவிட்டோம். நான் அதில் நம்பிக்கைக் கொண்டுள்ளேன். "நம்மால் அந்நிய பாஷைகளினால் பேச முடிந்தால் நலமாயிருக்குமே". நான் அதில் விசுவாசங்கொண்டிருக்கிறேன். நான் அந்த ஒவ்வொன்றிலும் நம்பிக்கைக் கொண்டுள்ளேன்.

**ஆனால் நாம் அதை உடையவர்களாயிருந்து அந்த மனவேதனையையும், அழுகையையும், நொறுங்குண்ட ஆவியையும் உடையவர்களாயில்லையென்றால், தேவன் அதை ஒருபோதும் உபயோகப்படுத்தவே முடியாது.**

அந்தக் காரியங்கள் நன்றாயிருக்கின்றன, ஆனால் அதனோடு செல்ல வேண்டிய மற்றொன்றையும் பெற்றிருக்க வேண்டும்.

நாம் முக்கியமான காரியத்தை விட்டு விட்டு, இரண்டாந்தரமானவற்றிற்காகச் சென்றுவிட்டோம்; நீங்கள் ஒருபோதும் ஒரு சிறியதன் பேரில் மிகப்பெரியதைப் பெற்றுக் கொள்ள முடியாது. நாம் அதை அறிந்திருக்கிறோம்.

65. நம்முடைய சொந்தக் கூட்டங்களிலும் கூட, நம்முடைய சொந்தக் கூட்டங்களிலும் ஆத்தும சுகமளித்தலுக்குப் பதிலாக சரீரப்பிரகாரமான தெய்வீக

சுகமளித்தளின் பேரிலேயே அதிகமாக இடமளித்திருக்கிறோம்.

**சகோதரனே இன்றைக்கு நமக்குத் தேவை என்னவென்றால் தேவனுக்காக அனல் மூண்ட ஆத்துமாக்கள் பேரிலான ஓர் எழுப்புதலின் விடியலேயாகும்.**

நான், "கொழுந்துவிட்டு எரிதல்" என்று பொருட்படுத்திக் கூறுவது பீடத்தண்டைத் தங்களுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுவதோடு முழங்காற்படியிடுவதேயாகும். ஆனால் ஐந்தே நிமிடங்களில் எழுந்து அதை மறந்துவிடுவதல்ல.

ஆயினும் இழந்துபோனவர்களை மீண்டும் கிறிஸ்துவினண்டைக்குத் திரும்பக் கொண்டுவர

ஆதாயப்படுத்தும்படிக்கு முயற்சித்தல்; அவர்களுடைய இருதயத்தின் மேல் உள்ள ஒரு பாரம்.

66. தேவனே உலகத்தின் எல்லா இன்பங்களையும் அதனுடைய எல்லா விளிம்புகளையும், அதனுடைய எல்லா விளையாட்டுகளையும் எடுத்துப் போட்டுவிட்டு, இழந்து போனவர்களுக்கான ஒரு பாரத்தை என் இருதயத்தின் மேல் வையும் என்பதே என் விண்ணப்பமாகும்.

67. அவர்கள், "ஆண்டவரே, ஐயா, நீர் யார் என்பதை நாங்கள் அறியோம். ஆனால் நாங்கள் உம்முடைய பிரசங்கத்தை விரும்புகிறோம். உங்ளே வந்து, இரவு முழுவதும் எங்களோடேத் தங்கியிரும்" என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். இயேசு உள்ளே

சென்றார். அவர்களோடு நடந்து செல்லுகையில், அவர்கள் அவரை அறிந்திருக்கவில்லை. அவர் ஒருமுறை உள்ளே சென்றபோது.. அது ஒரு சிறு குடிசையாயிருந்திருக்கலாம்; ஆனால் அவரைப் போன்று மிகத் தாழ்மையானது ஒன்றுமேயில்லை.

68. நீங்களோ, "நல்லது, சகோதரன் பிரான்ஹாமே, நான் ஒரு வயோதிக மனிதன்" என்று கூறலாம். நீங்கள் எவ்வளவு வயதானவர்கள் என்பதைக் குறித்து எனக்கு கவலையில்லை.

"நான் ஒரு குழந்தை." நீங்கள் எவ்வளவு வாலிபமாக இருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. "நான் மிகவும் ஏழையாயிருக்கிறேன். நான் அழுக்கு வேலை செய்யும்போது

அணிந்துகொள்ளும் ஒரு சாதாரண மேலாடையையே அணிந்துள்ளேன்". ஓ, நீங்கள் உங்களை ஒரு புல் வைத்துக் கட்டும் கோணிப்பையினால் சுற்றியிருந்தாலும், அது தேவனுக்கு எந்த வித்தியாசத்தையுமே உண்டு பண்ணாது.

அவரிடத்தில் கேளுங்கள். நீங்கள் தேவனுடைய பார்வையில் மகத்தானவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் மனிதனுடைய முன்னிலையில் முக்கியத்துவமில்லாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் தேவனுடையப் பார்வையில் மகத்தானவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய பிரஜைகளில் ஒருவராய் இருக்கிறீர்கள். "உள்ளே வந்து எங்களோடே தங்கியிரும்"

69. “ஓ, அவர் எனக்குள்ளாக வரும்படி என்னால் கேட்டுக்கொள்ள முடியவில்லை. நான் ஒரு குடிகாரனாய் இருந்து வருகிறேன். நான் ஒரு சூதாட்டக்காரனாய் இருந்து வருகிறேன்.” நீங்கள் என்னவாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அவரிடத்தில் வேண்டி தீர்வு காணுங்கள். அவர் உங்களுடைய அழைப்பின் பேரில் வருவார். அவர் ஒருவரையும் ஒருபோதும் புறக்கணித்திருக்கவில்லை. அவர் ஒருவரையும் ஒருபோதும் வெறுத்தொதுக்க மாட்டார். அவர் இருதயங்களுக்குள் பிரவேசிக்க வாஞ்சித்துக் கொண்டும், முயற்சித்துக் கொண்டுமிருக்கிறார். நீங்களோ, “நான் ஒரு தெரு விபச்சாரியாய் இருந்து வருகிறேன்” என்று கூறலாம். நீங்கள் என்னவாக இருந்து வருகிறீர்கள்

என்பதைக் குறித்து எனக்கு கவலையில்லை. தேவன் உங்களுடைய இருதயத்திற்குள்ளாகத் தம்முடைய வழியில் கிரியைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள், “கர்த்தாவே உள்ளே வந்து, என்னோடே தங்கியிரும்” என்று கூறுங்கள்.

★★★★★

மற்றவர்களை
கிறிஸ்துவிற்க்கு
ஆதாயப்படுத்த
நம்முடைய
தாலந்துகளைக்
கொண்டு நம்மால்
என்ன
செய்யமுடியுமென்ப
தைக் காண்போம்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: பிசாசியல் மதச்சார்பான மண்டலம்

DEMONOLOGY - RELIGIOUS REALM

219. யாரையும் நியாயந்தீர்க்காதீர்கள். ஒவ்வொரு வரையும் நேசியுங்கள். உங்களுடைய இருதயத்திலிருந்து உங்களால்

**நேசிக்க முடியவில்லையென்றால், அப்படியானால் கிறிஸ்து உங்களோடு இல்லை.**

220. ஒஹையோவிலுள்ள டொலேடோவில், ஒரு சிறு உணவு விடுதிக்குள் நான் சென்றேன். உணவு அருந்தும் இடத்திற்குச் சென்றேன், உணவின் போது அப்பத்துண்டை சாற்றில் அமுக்கி எடுக்கும் ஒரு சிறிய இடம், ஒரு அருமையான சிறிய இடம். அவர்கள் மிக அருமையாக இருந்தனர். அந்தப் பகல் வேளையில் ஞாயிறு ஆராதனைக்கு செல்லத்தக்கதாக அவர்கள் மூடியிருந்தனர். அவர்கள் உணவகத்தை மூடியிருந்ததால், தெருவிற்கு அப்பால் நான் செல்ல வேண்டியதாக இருந்தது,

உலகப்பிரகாரமான ஒரு பழைய சிறிய இடத்திற்கு, நான் அங்கே நடந்து சென்றேன். ஒஹையோவில் சூதாட்டம் சட்ட விரோதமானது என்பது எனக்குத் தெரியும். அங்கே மாநிலக் காவல்துறை போலிஸ்காரர் ஒருவர் ஒரு சிறு பெண்ணின் தோளின் மேல் தன் கரத்தை வைத்திருந்தார், அவருடைய கை அவளின் மார்பின் மேல் தொங்கிக் கொண்டிருந்தது, அவள் சிறிய துளையில் காசு போடுவதனால் இயங்கும் கருவியில் விளையாடிக் கொண்டிருந்தாள். நம்முடைய மாநிலங்களின், மற்றும் தேசத்தின் சட்டம் எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. பரிதாபம்!

221. அசையாத கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை

கொண்டிருக்கிறேன், நான் நின்று கொண்டிருக்கிறேன், மற்ற எல்லா நிலங்களும் சரிகின்ற மணலாக இருக்கின்றன. ஒன்றுமே மீதமாக இல்லை. அது சரி.

222. நான் இங்கே திரும்பிப் பார்த்தேன், அங்கே ஒரு அழகான வாலிபப் பெண் இருந்தாள், ஒருக்கால் பன்னிரெண்டுக்கும் இருபதுக்கும் இடைப்பட்ட வயதுப்பருவத்தில் இருந்திருக்கலாம், பத்தொன்பது, பதினெட்டு, பத்தொன்பது வயதாக இருந்திருக்கலாம். அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனரென்றால், அங்கே மேஜையை சுற்றிலும் பையன்கள் இருந்தனர், அது அதிர்ச்சியூட்டுகிற காரியமாக இருந்தது. நான் அங்கே உட்கார்ந்திருந்தேன்.

ஆகவே இப்பொழுது ஆச்சரியமென்னவென்றால், நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு ஒரு பெண் வந்து, "உமக்கு ஒரு நாற்காலி வேண்டுமா?" என்றாள்.

நான், "உமக்கு நன்றி. எனக்கு காலை ஆகாரம் வேண்டும்" என்றேன்.

223. நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தேன், இங்கே ஒரு வயதான பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு என்னுடைய தாயாரின் வயது இருக்கும் – ஐம்பத்தைந்து, ஐம்பத்தெட்டு வயது இருக்கும். ஜனங்கள் அணியும் அந்த சிறிய தெய்வீகமற்ற இரண்டு ஆடையை அவர்கள் அணிந்திருந்தனர்.

224. அவை குளிர்ச்சியாக உள்ளதென்று அவர்கள் உரிமை

கோருகின்றனர். “நீங்கள் கிறுக்கர்கள்” என்று விஞ்ஞானம் கூறுகின்றது. நிச்சயமாக, அப்படியல்ல. நீங்கள் உங்கள் நிர்வாணத்தை காட்டத்தான் விரும்புகிறீர்கள். அது ஒரு வெட்கக்கேடானது, அவமானம். ஒரு சீமாட்டி (lady) அவைகளை அணிந்து கொள்ளமாட்டாள். ஒரு பெண் (woman) அதைச் செய்வாள், ஆனால் ஒரு சீமாட்டி செய்ய மாட்டாள்.

225. ஆகவே பிறகு, அவர்கள் பிறகு... அங்கே அவள் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய சதை சுருக்கம் விழுந்து தொங்கி கொண்டிருந்தது. அவள் தன்னுடைய உதடுகளின் மேல் பகட்டு வண்ணமலர்ச் செடிவகையைப் போல் காணப்பட்ட ஒப்பனை அல்லது நீங்கள்

அதை எந்தப் பெயரில் அழைக்கிறீர்களோ, அது அங்கே இருந்தது, ஒரு ஆணின் தலையைப் போன்று மயிரைச் சிறிதாக கத்தரித்திருந்தாள், அது எல்லாவற்றையும் தாறுமாறாக்கி விட்டிருந்தது, அது அவலட்சணமான ஒன்று என்று வேதாகமம் கூறுகின்றது. ஆகவே ஒரு பெண், ஒரு ஆணானவன்...

226. ஒரு பெண் மயிரை வெட்டுவாளானால், அவளை விவாகரத்து செய்ய ஒரு மனிதனுக்கு உரிமை உண்டு என்று வேதாகமம் கூறுகின்றது, ஏனெனில் அவள் அவனுடன் உத்தமமாக இல்லை. இந்த நாட்களில் ஒன்றில் நாம் சென்று வேதாகமத்தை பிரசங்கம் செய்ய

வேண்டியதாயிருக்கிறது. அவள் தன் மயிரை குட்டையாக வெட்டினால், தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துகிறாள்" என்று கூறுகிறது. அவள் அவலட்சணமுள்ளவளாயிருப்பாளானால் , அவள் தள்ளப்பட வேண்டியவளாக இருக்கிறாள். நீங்கள் வேறொருவரை மணக்க முடியாது! ஆனால் நீங்கள் அவளைத் தள்ளி விடலாம். வியூ! பையனே, அது, அது கடினமான ஒன்றாகும், அதை என்னால் உணரமுடிகின்றது. ஆனால் அது தான் சத்தியமாயிருக்கிறது.

227. ஓ, ஒரு காலத்தில், நாம் பரிசுத்த ஆவியின் பரிமாணங்களில் அதை நாம் கொண்டிருந்தோம், ஆனால் நாம் தளர்ந்து போய்

விட்டோம். அந்த வயதான சகோதரன் "நாம் தளர்ந்து போய் விட்டோம், நாம் தளர்ந்து போய் விட்டோம். நாம் தளர்ந்து போய் விட்டோம், செம்மறியாடு வெளியே சென்று விட்டது, ஆனால் வெள்ளாடுகள் எப்படி உள்ளே வந்தது?" என்று கூறுவது வழக்கம். நீங்கள் தளர்ந்து போய் விட்டீர்கள். அது தான் காரணம், நீங்கள் தளர்ந்து போய் விட்டீர்கள், உலகமும் சபையும் ஒன்றோடொன்று கலந்து விட்டது. மோவாபியர்கள் இன்னும் மற்றவர் மற்றும் பிலேயாம் அவன் எப்படி அவர்களுக்குள் விவாகம் செய்தான், இன்று உள்ளது போன்றே அதே விதமாக. ஆகவே சபையானது முற்றிலுமாக மாசுப்பட்டிருக்கிறது, அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாகி தேவனுடைய

வாயிலிருந்து துப்பப்படுகின்ற லவோதிக்கேயா காலம் தான் பெந்தெகொஸ்தே காலமாகும். அந்த முழு குழுவிலிருந்து, தேவன் தம்முடைய மீதமுள்ளவர்களை, அழைக்கின்றார், அவளை வீட்டிற்கு கொண்டு செல்கின்றார், அது முற்றிலுமாக சரி, அது சரியாக உயிர்த்தெழுதலினூடாக இருக்கும்.

228. ஆகவே அங்கே அவள், அவளுடைய முகம் முழுவதுமாக உதட்டுக்கு பகட்டு வண்ணமலர்ச்செடி வகையைப் போல் காணப்பட்ட ஒப்பனையை உடையவளாக உட்கார்ந்திருந்தாள், அது முழுவதுமாக பூசப்பட்டிருந்தது. மேலும் அவள் தன்னுடைய கண்களின் மேல் கறுப்பு மை தீட்டியிருந்தாள், அவளுக்கு

வியர்வை வந்து கொண்டிருந்தது, அது கீழே விழுந்து கொண்டிருந்தது. அந்த வயதான பெண்ணிற்கு வயதான பேரப்பிள்ளைகள் கூட இருந்திருக்கக் கூடும். அவள் வயதான இரண்டு ஆண்களோடு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவர்களில் ஒருவர் தன்னுடைய கழுத்தைச் சுற்றி ஒரு பெரிய கழுத்துப் பட்டையை சுற்றியிருந்தார், ஜூன் மாதத்தில், அங்கே உட்கார்ந்திருந்தனர். அப்பொழுது அவன் எழுந்து குடித்துக் கொண்டிருந்தது போலிருந்தது, அவளும் கூட குடித்துக் கொண்டிருந்தாள். அவள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

229. நான், "ஓ தேவனே! தேவனே, அதை நீர் தாம் ஏன்

முற்றிலுமாக எடுத்துப் போடக்கூடாது? ஏன் அதைச் செய்யக்கூடாது? என்னுடைய சிறிய ஷாரோன் .... என்னுடைய சிறு குழந்தை என்னுடைய சிறிய சாராள் மற்றும் என்னுடைய சிறிய ரெபேக்காள் இந்த சந்ததியில் வளர்க்கப்பட்டு, இந்த விதமான காரியத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டுமா?" என்று எண்ணினேன். நான், "இந்த பூங்காக்களிலும் மற்ற இடங்களிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பார்" என்று எண்ணினேன். நான், "ஓ, தேவனே! ஓ, அது உம்முடைய சித்தம் என்பதைப் போல் நீர் ஷாரோனை எடுத்துக் கொண்டதற்காக நான் மகிழ்ச்சி கொள்கிறேன். என்னுடைய சிறு ரெபேக்காளும் சிறு சிறு சாராளும் இதைப் போன்ற காரியத்தின் கீழ்

வளர்க்கப்பட வேண்டுமோ?" என்று எண்ணினேன். மக்கள் அழைப்பது அவை ... பாடற்குழுவில் பாடுவது மற்றும் எல்லா காரியமும் .... ஆகவே நான், "இது மானக்கேடான ஒன்றல்லவா?" என்று எண்ணினேன். நான், "தேவனே, உம்முடைய பரிசுத்த நீதியானது அதை எப்படி சகிக்கின்றது? உம்முடைய பரிசுத்த நேர்மையான சீற்றமானது அங்கே பறந்து சென்று இந்த இடத்தை வெடிக்கச் செய்வது போல காணப்படுகிறதே" என்று எண்ணினேன்.

230. அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் "இந்தப் பக்கம் வா" என்று கூறினதை நான் கேட்டேன். நான் இங்கே நடந்து சென்றேன். ஆகவே அவர் என்னூடாக வந்த

போது, ஒரு வித்தியாசமான நபராக நான் உணர்ந்தேன். “எதற்காக அவளை குற்றவாளியாகத் தீர்த்துக் கொண்டிருக்கிறாய்?”

நான், “அவள் இருக்கின்ற விதத்தை, அதை நோக்கிப் பாரும்,” என்றேன். ஆகவே இங்கே தான் அவர் ....

231. நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன். இதைப் போன்ற ஒரு உலகத்தை நான் கண்டேன். அது உருண்டையான, வேறொரு உலகம். ஆனால் இங்கே இருந்த உலகம், அதைச் சுற்றிலும் ஒரு வானவில்லைக் கொண்டிருந்தது, தேவனுடைய கோபாக்கினையிலிருந்து பாதுகாக்கின்ற கிறிஸ்துவின் இரத்தமாக அது இருந்தது. அதை அவரால் பார்க்க

முடியாதிருந்தது, அவர் - அவர் அந்த காரியத்தை சரியாக இப்பொழுதே அழித்துவிடுவார், ஏனெனில் அவர், "அதைப் புசிக்கும் நாளில் நீங்கள் சாகவே சாவீர்கள்." என்றார். ஆகவே அவர் அதைச் செய்வார்.

232. அப்பொழுது நான் இந்த விதமாக சிந்தித்தேன். என்னை நானே கண்டேன். அதை நான் செய்யாவிடினும், ஆனாலும் எப்படியாயினும் நான் ஒரு பாவியாயிருந்தேன். ஆகவே அப்பொழுது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு ஒரு முட்டுதாங்கியாக இருக்கிறது. பாருங்கள்? அது, நான் பாவம் செய்கின்ற போது, என்னுடைய பாவங்கள் அவரை மோதி அவருடைய விலையேறப் பெற்ற தலையை

நொறுக்கினது, இரத்தமும் தண்ணீரும் ஓடி விழுகின்றதை என்னால் காணமுடிகின்றது. "பிதாவே, அவனை மன்னியும், தான் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறான்" நான் ஏதாவதொன்றைச் செய்து அதை மோதி தள்ளுவேன். "பிதாவே, அவனை மன்னியும்."

233. அது அவரைக் கடந்திருக்குமானால், நான் அழிக்கப் பட்டிருப்பேன். நான் அவருடைய கிருபையை ஏற்றுக்கொள்ள வில்லையெனில், அதைக் கடந்து என் ஆத்துமா செல்லும் நாளில் நியாயந்தீர்க்கப் பட்டுவிட்டேன். நான் அதை நிராகரித்து விட்டேன். நியாயத்தீர்ப்பைத் தவிர வேறெதுவுமே மீதி இல்லை. நியாயந்தீர்க்கப்

பட்டாயிற்று, நான் ஏற்கெனவே நியாயந்தீர்க்கப்பட்டு விட்டேன். தேவன் "நீ அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள்" என்றார். நீங்கள் அப்பொழுதே நியாயந்தீர்க்கப்படுவீர்கள். இந்த பகல் வேளையில் இது தான் நியாயத்தீர்ப்பின் ஆசனமாக இருக்கின்றது, கிறிஸ்துவின் பேரில் உங்களுடைய மனப்பான்மை.

234. ஆகவே அப்பொழுது நான், "ஆம், அது சரிதான்" என்று நினைத்தேன். நான் அவரை நோக்கி தவழ்ந்து சென்றதை ஒரு நாளிலே நான் கண்டேன். என்னுடைய பழைய புத்தகம் அங்கே இருந்ததை நான் கண்டேன், ஒரு பாவியாக, அதன் மேல் எல்லாம் இருந்தது. என்னுடைய பாவங்களையும் அது என்ன செய்து

கொண்டிருந்தது என்பதையும் நான் கண்டேன், நான் "கர்த்தாவே, என்னை மன்னிப்பீரா?" என்று கூறினேன்.

235. அவர் தம்முடைய பக்கமாக தம்முடைய கரத்தை எடுத்தார், இரத்தத்தை எடுத்து, அதன் மேலே குறுக்காக எழுதி, "மன்னிக்கப்பட்டது" என்றார். அவர் மறதி என்னும் கடலில் அதை திரும்பப் போட்டார், அதை திரும்பவுமாக நினைக்காதிருப்பதற்காக. அது என்றென்றைக்குமாக கடந்து சென்று விட்டது! அவர் "நான் உன்னை மன்னித்தேன், ஆனால் நீ அவளை குற்றவாளியாகத் தீர்க்கிறாயே" என்றார்.

அது என்னுடைய கருத்தை மாற்றினது. நான் "என் மேல் கர்த்தாவே, கிருபையாயிரும்" என்றேன்.

236. நான் அதை விட்டு வெளியே வந்தேன், நான் கடந்து சென்று உட்கார்ந்தேன். நான், "அம்மா, எப்படியிருக்கிறீர்கள்?" என்றேன்.

அவள், "ஓ, ஹலோ" என்றார்கள்.

237. அப்பொழுது நான், "என்னை மன்னிப்பீர்களானால், நான் ரெவரெண்ட் பிரன்ஹாம், ஒரு ஊழியக்காரன்" என்றேன்.

அவள், "ஓ, பொருத்தருளும். பொருத்தருளும், ரெவரெண்ட் பிரன்ஹாம்" என்றாள்.

238. நான், "அம்மாளே" என்றேன். காரியத்தை விளக்கிக் கூறினேன். நான், "நான் அங்கே நின்று கொண்டு உங்களை குற்றவாளியாக தீர்த்ததை என்ன ஒரு பயங்கரமான காரியம்" என்று

எண்ணிக்கொண்டிருந்தேன், ஒருக்கால் உங்களுக்கு பிள்ளைகள் இருக்குமே" என்றேன்.

அவள் "எனக்கு பிள்ளைகள் உண்டு" என்றாள்.

239. நான், "நீங்கள் தவறாக செல்வதற்கு என்ன காரணமாக இருந்தது?" என்றேன். பிளக்கத்தக்கதான ஒரு கதையை என்னிடம் அவள் கூற ஆரம்பித்தாள். நான், "அவர் ஏன் இந்த விதமான காரியத்தை பூமியை விட்டே பெயர்ந்தெரியக் கூடாது என்று நான் – நான் தேவனைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இங்கே நீங்கள் குடித்து வெறித்திருக்கின்ற இரண்டு மனிதரோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள், நீங்களும் குடித்து

வெறித்திருக்கிறீர்கள்" என்றேன். மேலும் நான், "என்றாவது ஒரு நாளிலே.... அந்த இரத்தமானது தேவனுடைய கோபாக்கினையை உங்களிடமிருந்து தடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்கள் ஏதாவதொன்றில் நீங்கள் மரிக்கப் போகிறீர்கள். ஆகவே, அப்படியானால், இப்பொழுது நீங்கள் – நீங்கள் சுயாதீனமுள்ள ஒருவளாக இருக்கிறீர்கள், நீங்கள் நிராகரிக்கலாம் அல்லது பெற்றுக் கொள்ளலாம்" என்றேன். நான், "ஆனால் ஒரு நாளில் உங்கள் ஆத்துமா அதைக் கடந்து செல்லப் போகின்றது, அங்கே இரக்கம் இருக்காது. உங்களுடைய பாவங்களிலே நீங்கள் மரிப்பீர்களானால், நீங்கள் ஏற்கெனவே நியாயந்தீர்க்கப்பட்டீர்கள், ஆகவே

நீங்கள் பாதாளத்திற்கு செல்லப் போகிறீர்கள்" என்றேன்.

240. என்ன ஆயிற்றென்று தெரியுமா? அந்த உணவு விடுதியின் இருக்கையிலிருந்து அந்த பெண் மெதுவாக வந்து விட்டாள். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதுமே கேட்டிராத ஒரு ஜெப கூட்டத்தை நாங்கள் கொண்டிருந்தோம், அவள் கிறிஸ்துவினண்டை வந்தாள். அது என்ன? **அவர்களை குற்றவாளியென்று தீர்க்காதிருங்கள்; சுவிசேஷத்தை அவர்களுக்கு கூறுங்கள். அவர்கள் பிசாசினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்;** இந்த பரிமாணத்தில் இருக்கின்ற அழிவுக்குள்ளாக இருக்கும் மானிடர்கள். இங்கேயிருந்து வருகின்ற ஒன்றினால்

இயக்கப்படுகிறார்கள். நம்முடைய இயக்கம் பரத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது. மற்றவர்களை கிறிஸ்துவிற்க்கு ஆதாயப்படுத்த நம்முடைய தாலந்துகளைக் கொண்டு நம்மால் என்ன செய்ய முடியுமென்பதைக் காண்போம்.

★★★★★

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


**சகோ. பினேகாஸ்**

**போன்: 8838623242, 9551855108**

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in